# ஆய்த எழுத்து

## தமிழியல் ஆய்வு இதழ்

காலாண்டிதழ் ஜூலை 2016

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN: 2278-7550




visit us: www.pallavipathippakam.in

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | கம்பராமாயணத்தில் புறத்திணைக் கோட்பாடுகள் | பா. பானுப்பிரியா | 5 |
| 2. | கம்பராமாயணமும் ஆளுமை மேம்பாடும் | முனைவர். க. தனலட்சுமி | 8 |
| 3. | இருப்பும், இயக்கமும் | முனைவர். சு. இராமதிலகம் | 11 |
| 4. | நாலடியாரில் உத்திகள் | கி. கண்மணி | 14 |
| 5. | மூவேந்தர்களின் சிறப்புத் தன்மைகள் | பேராசிரியர். ந. ஜெயசுதா | 17 |
| 6. | தமிழ்ப் புதினங்களில் தழைக்கும் மனித உறவுகள் | A.P.ராகவி | 21 |
| 7. | பிற்கால இலக்கண நூல்களில் மெய்ப்பாட்டின் நிலை | ப.ரேவதி | 25 |
| 8. | சேதுபதியின் கவிதைகளில் பெண்களின் சிக்கல்களும் தீர்வுகளும் | வெ. சகுந்தாமணி | 27 |
| 9. | குறிஞ்சி நில மக்களின் திருமண மரபு | இரா.புவனேஸ்வரி | 31 |
| 10. | அகநானூற்றில் தோழியின் உணர்வுகள் | முனைவர் க.ரமேஷ் ச.சித்ரா | 33 |
| 11. | பரிபாடலில் திருமாலில் சிறப்புகள் | முனைவர் க.ரமேஷ் ஜெ.மேனகா | 35 |
| 12. | குறிஞ்சி கலியில் உள்ளுறை உவமமும் உளவியலும் | முனைவர் க.ரமேஷ் ந.கே.கோமதி | 37 |
| 13. | நன்னூலார் கூற்றுப்படி ஐங்குறுநூற்றில் அடைமொழிப் புணர்தல் | முனைவர் க.ரமேஷ் பா.விஷ்ணுபிரியா | 39 |
| 14. | பதிப்புச் செம்மல் - உ.வே. சாமிநாதையர் | முனைவர் இரா.அருள்மொழி | 42 |
| 15. | திருக்குறளில் தமிழ் இலக்கண நூல்கள் கூறும் வேற்றுமைக் கோட்பாடு | ஆனந்தி | 45 |
| 16. | டாக்டர் ஹிமானா சையத் கூறும் சமூகச் சிக்கல்கள் | முனைவர் S.சாபிராபேகம் | 48 |
| 17. | இக்காலத் தமிழில் உயிரொலி மாற்றங்கள் | முனைவர் கி.சங்கரநாராயணன் | 51 |
| 18. | செ.கணேசலிங்கன் சிறுகதைகள் காட்டும் இனமுரண் | முனைவர் ரா. சுகுமார் | 54 |
| 19. | வாஸந்தியின் நாவலில் பெண் சிசுக்கொலை | கு.அங்கயற்கண்ணி | 58 |

# மூவேந்தர்களின் சிறப்புத் தன்மைகள்

பேராசிரியர். ந. ஜெயசுதா,
என். ஜி.எம். கல்லூரி,
பொள்ளாச்சி.

மூவேந்தர் என்று சிறப்பு பெற்றிருக்கின்ற சேர சோழ பாண்டியர்களை "வண் புகழ் மூவர்" என சிறப்பிக்கின்றார் சேக்கிழர். மூவேந்தர்கள் ஆண்ட நாட்டு எல்லை குறித்துக் கூறுமிடத்து இம்மூவரும் தமிழ்நாட்டின் தெற்கு எல்லையில் முழுகிப்போன குமரியாற்றிக்குத் தெற்குள்ள எல்லையெல்லாம் பழம் பாண்டிய நாடாகவும், வடக்கிருந்த பகுதியில் மேல் பகுதி சேர நாடாகவும் கீழ்ப்பகுதி சோழ நாடாகவும் இருந்து சிறப்பான ஆட்சியை ஆண்டுள்ளனர்.

மூவேந்தர்களின் குடிப்பெருமையை அறிய தொல்காப்பியம் மிகச் சிறந்த சான்றாக அமைவதை "வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்" (நூற்.78) என்னும் நூற்பா எடுத்துக்காட்டுகின்றது. இத்தகைய சிறப்பு வாய்ந்த வேந்தர்களின் இயல்புகளையும், தனித் தன்மைகளையும் ஆராயப்படவுள்ளது.

### சோழனின் குணநலன்கள்

மூவேந்தர்களும் சிறந்த குணமுடையவராக இருந்துள்ளனர். சிறந்த நோக்கத்தோடு பொய் பேசாது வாய்மையாளனாகச் சேர மன்னன் இருந்துள்ளான் என்பதை,

> "நிலம் திறம் பெயரும் காலை ஆயினும்
> கிளந்த சொல் நீ பொய்ப்பு அறியலையே" (பதி. 63: 6 - 7)

என்னும் பாடல் வரிகள் பதிவு செய்கின்றன. மிகப் பெரிய இந்த நிலவுலகம் அழியக் கூடிய காலத்தை "ஊழிக் காலம்" என்பர். அந்த ஊழிக்காலம் வந்த போதும் சொன்ன சொல்லிலிருந்து மாறாது, பொய் பேசாது வாய்மையாளனாகத் திகழ்ந்தான்.

சேரமன்னன் விளையாட்டிற்கும் கூட பொய் பேசாது உண்மைத் தன்மையுடன் பகைவர் கூறும் அலர் மொழிகளை பொருட்படுத்தாத தன்மையை,

> "நகையினும் பொய்யா வாய்மை" (பதி. 70: 12)

என்னும் அடிகள் மூலம் அறியமுடிகின்றது. இத்தகைய வாய்மையை வள்ளுவர் கூறுமிடத்து,

> "வாய்மை எனப்படுவது யாது எனில் யாது
> தீமை இலாத சொலல்" (குறள். 291)

என்ற குறளால் ஒவ்வொருவரும் பேசக்கூடிய பேச்சானது பொய்யின்றி உண்மையைப் பேசுவதாக அமையவேண்டும். அதுவே நன்மை தருவதாக அமையும் என்று கூறுகிறார். அந்த வகையில் சேரன் வாய்மையில் சிறந்தவனாக விளங்கியுள்ளான் என்பதை அறிய முடிகின்றது. நாட்டு மக்கள் சிறந்த செல்வங்களைப் பெற்று வளமோடு வாழ அந்நாட்டு மன்னன் தன் மக்களுக்காக ஓய்வின்றி பாடுபடுபவனாக இருக்க வேண்டும். அத்தகைய முறையில் சேரன் சோம்பலில்லாது விரைந்து செயலாற்றும் படையையும் கொண்டு விளங்குகின்றான் என்பதை,

> "வேறு புலத்து இறுக்கும் தானையொடு
> சோறு பட நடத்தி - நீ துஞ்சாய் மாறே" (புறம். 22: 37 - 38)

என்ற வரிகள் தெரியப்படுத்துகின்றது. மேலும் இச்சேர மன்னன் நிலத்தைப் போன்று வலிமையுடையவன் என்பதையும், முருகன் போன்று அழகு உடையவன் என்பதை,

> "........பொருநர்க்கு
> இரு நிலத்து என்ன நோன்மை
> செரு மிகு சேஎய்" (புறம். 14: 17 - 19)

என்ற பாடலடிகளின் மூலம் அறியமுடிகின்றது.

சேரன் இயற்கையோடு ஒத்தவன் என்பதைக் கூறுதல்

நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம் என்பனவற்றை ஐம்புதங்கள் என்று வழங்குகிறோம். இந்த ஐம்புதங்களான இயற்கையோடு இணைத்து,

"ஐம்பெரும் புதத்து இயற்கை போல
போற்றார்ப் பொறுத்தலும், சூழ்ச்சியது
அகலமும்,
வலியம், தெறலும், அளியும் உடையோய்"
(புறம். 2: 6 - 8)

எனப் புகழ்ந்து பாடுகிறார். இயற்கையானது ஐந்து பெரும் கூறுகளால் அமைந்தது என்பதை,

"நிலம், தீ, நீர், வளி, வீசும்பொடு ஐந்தும்
கலந்த மயக்கும் உலகம் ஆதலின்"
(தொல். பொ. மர. 89)

என்னும் தொல்காப்பிய நூற்பாவாலும் அறியமுடிகிறது.

பல்வேறு அணுக்களால் செறிந்த நிலம், நிலத்தின் இடத்தில் உயர்ந்திருக்கும் வானம் வானத்தின் அளவு பொருந்தி நிற்கும் காற்று, காற்றினால் அதிகமாகக் கூடிய தீ, தீயை அணைக்கக்கூடிய நீர் என ஒன்றுக்கொன்று உடன்பட்ட ஐந்து வகைப்பட்ட இயற்கை ஆற்றலோடு சேரனை ஒப்புமைப்படுத்துவதை அறிந்து கொள்ளமுடிகிறது. சேரன் பகை மன்னர்கள் செய்யும் பிழையை நிலம் போல பொறுப்பவனாகவும், அப்பகைவரை அழிக்க ஏற்பாடு செய்தல் வானமளவு அகன்றதாகவும், பகையை வேறோடு முடித்துக்கொள்ள வேண்டும் என்ற மனவலிமையும், நான்கு படை (குதிரைப்படை, யானைப்படை, தேர்படை, காலாட்படை) வலிமையும் காற்றின் வலிமையோடு ஒத்ததாகவும், அப்பகைவனை போரிட்டு அழிக்கும் செயல் தீயை ஒத்ததாகவும், அப்பகைவர் சேர மன்னனுக்குக் கீழ் பணிந்து வழிபடும் காலத்தில் நீர் போன்ற குளிர்ச்சி பொருந்திய தன்மையால் அருள் செய்பவனாகவும் விளங்குகின்றான். சேரன் இத்தகைய ஐம்புதங்களான இயற்கையோடு இயைந்துள்ள தன்மையை உடையவன் என்பதை அறிய முடிகின்றது.

ஐம்புதங்கள் இவையென லிப்கோ பேரகராதி, "நிலம், நீர், நெருப்பு, வளி, வானம்" (ப. 251) என்று விளக்கம் தருவதன் மூலமும் இக்கருத்துக்கு வலு சேர்ப்பதாக அமைகின்றது.

முரஞ்சியூர் முடிநாகராயர் ஐம்புதத்தோடு ஒப்புமைப்படுத்த கூடிய சேரனை, கபிலர் சேரனோடு, சூரியன் ஒப்புமையுடையவன் ஆக மாட்டான் என்று கூறுவதாக அமைந்த பாடலில்

"யாங்கனம் ஒத்தியோ? வீங்கு செலல்
மண்டிலம்!
பொழுது என வரைதி: புறங்கொடுத்து இறத்தி
மாறி வருதி மலை மறைந்து ஒளித்தி,
பகல் விளங்குதியால் பல் கதிர் விரித்தே"
(புறம். 8: 6 - 10)

என்ற இவ்வரிகளில் சேரமான் கடுங்கோ வாழியாதனை கபிலர், இவ்வுலகம் முழுவதையும் தன் குடைக்குகீழ் ஆட்சி செய்யக்கூடியவன் சேரன். சூரியன் மிகவும் வேகமாகச் செல்லக் கூடிய இயல்புடையவன். பகலில் மட்டுமே வரக் கூடியவன் என்ற வரையரையும் குறிப்பிடுகிறது. இரவில் நிலா வருகின்றபோது திரும்பி ஓடுபவனாகவும், மலையிடத்து மறைந்து ஒளிவீசக்கூடியவனாகவும், அகலமான மிகப் பெரிய வானத்தில் தன்னுடைய கதிர்களைப்பரப்பி பகல் நேரத்தில் மட்டுமே வரக்கூடியவனாகவும் சூரியன் விளங்குகின்றான். இரவு, பகல் என்று எல்லா நேரங்களிலும் இப்புமியைக் காக்கக்கூடிய சூரியனைச் சேரனோடு எவ்வாறு ஒப்புமைப்படுத்த முடியும், முடியாது. காரணம், சேரமான் கடுங்கோ வாழியாதன் தன் செங்கோல் ஆட்சியில் சூரியனைப் போன்ற ஆற்றலும் சந்திரன் போன்ற தன்னொளியும் கொண்டவனாகத் திகழ்கிறான் என்பதனால் இப்பாடலில் சூரியனோடும் சந்திரனோடும் ஒப்புமைக்கூற முடியாத ஆற்றல் வாய்ந்தவன் என்பது புலனாகிறது. இவ்வகையான பல சிறப்பான தன்மைகளையுடைய சேரனை முரஞ்சியுர் முடிநாகராயர்,

"பாஅல் புளிப்பினும் பகல் இருளினும்
நாஅல் வேத நெறி திரியினும்
திரியாச் சுற்றமொடு முழுது சேண் விளங்கி"
"பொற்கோட்டு இமயமும், பொதியமும்
போன்றே"
(புறம். 2: 17 - 19 24)

வாழ்த்துகிறார். பால் தன்னுடைய இனியசுவையிலிருந்து மாறி புளித்தாலும் சூரியனின் கதிரொளி குறைந்து இருளை உண்டாக்கினாலும் நான்கு வேதங்களில் கூறிய ஒழுக்கநெறிகள் மாறினாலும், என்றும் வேறுபாடு இல்லாது அரசு முறைமைகளை அறிந்த அமைச்சர்கள் அவர்களின் சுற்றமொடு நிலைத்து நிற்கின்ற இமயமலையும் பொதிகமலையும் போல வாழ்க! என்று வாழ்த்துதலின்மூலமும் பல சிறந்த தன்மைகளையுடைய சேரனின் பெருமையை அறியமுடிகின்றது. மேலும் எட்டாம் பத்தில் அரிசில் கிழார் சிங்கத்தைப் போன்றவன் சேரன் என்பதை,

"இரும் புலி கொன்று பெருங் களிறு அடூஉம்
அரும் பொறி வயமான் அனையை பல்வேல்"
(பதி. 75: 1 - 2)

என்ற இப்பாடல் வரிகளில் பெரிய புலியைக் கொன்ற பெரிய யானையையும் கொன்று வீழ்த்துகின்ற அறிய வரிகளையுடைய சிங்கத்தைப் போன்றவன் பெருஞ்சேரல் என்று போற்றப்படுகின்றான்.

இதிலிருந்து சேர மன்னன் சிறப்பான உடல் வலிமையும் மன வலிமையும் பெற்றிருந்தான் என்பதும், எத்தனை பேர் வந்தாலும் அஞ்சா நெஞ்சம் உடையவனாக இருந்துள்ளமையால் இவன் சிங்கத்தோடு ஒத்தவனாக இருந்திருக்க வேண்டும் என்று கூறுவதற்கு ஏதுவாகவுள்ளது.

## சோழ மன்னனின் தன்மைகள்

சோழன் இனிமையான சொல்லைப் பேசுபவனாகவும், எளிமையான தோற்றத்தை உடையவனாகவும் இருக்கக் கூடியவன் என்பதை,

"இன்று கண்டாங்குக் காண்குவம் - என்றும்
இன்சொல் எண் பதத்தை ஆகுமதி -பெரும!"
(புறம். 40: 8 - 9)

என்ற வரிகளில் எடுத்தியம்புகிறது. இந்த இயல்பான தன்மையை வள்ளுவர்,

"காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லின் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்" (குறள்: 386)

என்ற இக்குறளின் வாயிலாக மன்னன் என்பவன் மக்கள் எல்லோரையும் எளிதாகக் காணக்கூடியவனாகவும், கடுமையான சொல்லைப் பேசாது இனிமையான சொல்லைப் பேசக்கூடியவனாகவும் இருக்கின்ற அரசனின் நாடு புகழ்பெற்று விளங்கும் என்று கூறுகின்றார்.

## சோழனும் இயற்கையும்

சோழன் இயற்கைப் பொருளில் ஒன்றான சூரியனோடு ஒப்புமைப்படுத்தப் படுகின்றான்.

"நீயே அலங்கு உளைப்பரீ இவுளிப்
பொலந் தேர் மிசைப் பொலிவு தோன்றி
மாக் கடல் நிவந்து எழுதரும்
செஞ் ஞாயிற்றுக் கவினை மாதோ"
(புறம். 4: 13 - 16)

என்ற பாடல் அடிகளில் பெரிய கடலின் நடுவே உயரமாக எழும் இளம் சிவப்பான நிறத்தில் சூரியன் அழகாகவும் பிரகாசமாகவும் இருக்கின்றான். அதே நேரத்தில் சுட்டெரிப்பவனாகவும் இருக்கின்றான். இத்தகைய தோற்றமுடையவன் சோழன் என்று கூறுவதன்மூலம் சூரியன் போன்று பார்ப்பதற்கு அழகாகவும் சுடுவதுபோன்று பகைவனைச் சுட்டெரிக்கும் வீரம் பொருந்திய தன்மையையும் அறிய முடிகின்றது. மேலும் இக்கருத்தை,

"நீ உடன்று நோக்கும் வாய் எரி தவழ
நீ நயந்து நோக்கும் வாய் பொன் பூப்ப
செஞ் ஞாயிற்று நிலவு வேண்டியினும்
வெண் திங்களுள் வெயில் வேண்புனும்
வேண்டியது விளைக்கும் ஆற்றலை
ஆகலின்" (புறம். 38: 5 - 9)

என்ற அடிகளும் சூரியனோடு ஒப்பிடும் தன்மையும் அருள் குணத்தையும் இப்பாடலின்வழி எடுத்துரைப்பதிலிருந்து அறியமுடிகிறது.

வீரத் தன்மையை எடுத்துக்கூறுதல்

மேகங்களால் உண்டாக்கக்கூடிய இடியைப் போன்றவன் சோழன் என்பதை,

"நஞ்சுடை வால் எயிற்று, ஐந்தலை சுமந்த
வேக வெந்திறல், நாகம் புக்கென
பெரு மலை விடரகத்து வரும்
எறிந்தாங்கு" (புறம். 37: 1 - 4)

என்ற இப்பாடல் வரிகளின் மூலம், விசத் தன்மை வாய்ந்த வெண்மையான பல்லையுடைய பாம்பு இடிச் சத்தம் கேட்டு பயந்து நடுங்கும், அதுபோல சோழனைக் கண்ட பனை மூவேந்தர்கள் அஞ்சி நடுங்குவார்கள். எனவே இடியைப் போன்ற கடுமையான குரலும் வீரமும் வெளிப்படுகின்றது. இவ்வாறு சோழ மன்னர்கள், சூரியன் நிலவு போன்ற தன்மைகளைப் பெற்றும் காட்சிக்கு எளியவனாகவும் இருந்துள்ளமையை சங்கப்பாடல் கொண்டு நிறுவ முடிகிறது. சிறப்புக்குரியவர்களாக விளங்கியுள்ளமை புலனாகிறது.

## பாண்டிய மன்னனின் தன்மைகள்

பாண்டிய மன்னன் தலையாலங்கானம் என்னும் இடத்தில் சேர சோழர் என்ற இரு வேந்தர்களும், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன் ஆகிய ஐந்து பெரும் வேளிர்களும் கூடி பாண்டியன் மீது படையெடுத்து வந்துள்ளனர். அவர்களைப் பாண்டியன் ஒருவனாக எதிர்த்து நின்று வெற்றி பெற்றுள்ளான். ஒருவரோடு ஒருவர் போரிடுவதுதான் மரபு. இருப்பின் இங்கு ஏழு பேர் சேர்ந்து ஒருவனோடு போரிடும்பொழுது அப்பாண்டியன் வென்ற தன்மையை,

"ஞாலம் நெளிய ஈண்டிய வியன் படை
ஆலங்கானத்து அமர் கடந்து அட்ட
கால முன்ப" (புறம். 23: 15 - 17)

என்ற அடிகளின் மூலம் கல்லாடனார் குறிப்பிடுகிறார்.

இப்போரில் படைகளில் பெருக்கம் அதிகமாக இருந்ததனால் இப்புமி நெளியும் படியாக அமைந்தது. இப்படைகளையெல்லாம் தனி ஒருவன் வென்றதனால் எமனுக்கு நிகராக வைத்துப் போற்றப்படுவதை அறியமுடிகின்றது.

இவ்வலிமை மிக்கப் பாண்டிய மன்னன் எமனைப் போன்றவன் என்று மட்டுமல்லது சூரியனையும், நிலவையும் போன்ற பல குணங்களில் தன்மையும் பெற்றுள்ளான் என்பதை,

"வெங்கதிர்ச் செல்பன் போலவும் குடதிசைத்
தண் கதிரி மதியம் போலவும்
நின்று நிலைஇயர், உலகமொடு உடனே"
(புறம்: 56. 22 - 24)

"தண் கதிர் மதியம் போலவும் தெறுசுடர்
ஒண் கதிர் ஞாயிறு போலவும்
மன்னிய பெரும நீ நிலமிசையானே"
(புறம். 6: 27 - 29)

என்ற பாடல் அடிகளிலும், என்றுமே மாறுபாடில்லாது தனக்கு என்று வரையரை செய்து கொண்ட சூரியனையும், நிலவையும் போல வாழ வேண்டும் என புகழ்வதன்மூலம் பாண்டிய மன்னன் இயற்கையோடு இணைத்துப் பெருமைப்படப் பேசுவதை அறியமுடிகின்றது.

நால்வரைப் போன்றவன் என சிறப்பித்தல்

சிவன், பலதேவன், திருமால், முருகன் என்ற நால்வரில் , திருமாலும் முருகனும், முல்லை குறிஞ்சி நிலத்துக்குரிய தெய்வங்கள், பன்னெடுங்காலம் தொட்டு வழிபடக்கூடிய தெய்வம் சிவன். வேளாளரைச் சிறப்பு செய்யக்கூடிய பலதேவன் என்னும் இததெய்வங்களோடு ஒப்புமையுடையவன் பாண்டியன் என்பதை,

"கூற்று ஒத்தியே, வாலியோனை:
புகழ் ஒத்தியே இகழுநர் அடுநனை
முருகு ஒத்தியே, முன்னியது முடித்தலின்,
ஆங்கு ஆங்கு அவர் அவர் ஒத்தலின்
யாங்கும்
அரியவும் உளவே, நினைக்கே?"
(புறம். 56: 11 - 15)

என பாடல் அடிகளின் மூலம் அறியமுடிகின்றது.

பாண்டியன் கோபம் என்ற குணத்தில் சிவனையும் வலிமை என்ற வீரத்தில் பலதேவனையும், பகைவரைக் கொல்வதில் திருமாலையும், அழகிலே முருகனையும் ஒத்து விளங்குபவன் பாண்டியன். நால்வரின் சிறந்தப் பண்புகளோடு ஒப்பிட்டுக் கூறியமையால் கடவுளோடு நிகரானவனாகப் போற்றப்படுவதை அறியலாம். மன்னன் என்பவன் இறைவனுக்குச் சமமாக எண்ணப்படுவது புலனாகின்றது.

மூவேந்தர்களும் தங்களது நாட்டைச் சிறந்த முறையில் ஆட்சி செய்துள்ளனர். அதற்குத் தேவையான சிறந்த குணங்களையும், பண்புநலன்களையும் ஒருங்கே பெற்றுத் திகழ்ந்துள்ளனர் என்பதை சங்கப் பாக்கள் கொண்டு அறியமுடிகின்றது...